**செய்தி வெளியீடு எண் : 547** **நாள்: 06.04.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (6.4.2022) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் மானியக் கோரிக்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் உள்ளத் தொழில் வணிகத் துறை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (Sidco), தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் (INDCOSERVE), சேலம் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் (SAGOSERVE), தமிழ்நாடு கூட்டுறவு வங்கி (TAICO BANK), தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்(EDII), தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் ( TANSI) ஆகிய துறைகளில் கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்தும், நடப்பு நிதியாண்டு மானியக் கோரிக்கையில் புதிதாக அறிவிக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.வி.அருண் ராய் இ.ஆ.ப., தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன் இ.ஆ.ப., தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ஆர்.கஜலட்சுமி.இ.ஆ.ப., சிறப்புச் செயலாளர் திருமதி உமா மகேஸ்வரி இ.ஆ.ப. மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in